**சுவாமி விவேகானந்த கலாசார நிலையம்**
**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**
**கொழும்பு**

*************

**<u>ஊடக அறிக்கை</u>**

2020 ஆம் ஆண்டுக்கான எசல போயா தினத்தினை அனுஷ்டிக்கும் முகமாக கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கலாசார பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் - கொழும்பு, ஜூலை 03 ஆம் திகதி மாலை 5 மணியளவில் இலங்கை மற்றும் இந்தியாவைச் சேர்ந்த பௌத்த புலமையாளர்களின் பங்கேற்புடன் இணையவழி மூலமான கலந்துரையாடல் ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தது. "உலகின் நலனுக்காக தம்மம்" என்ற தலைப்பிலான இந்த இணைய கருத்தரங்கில் புத்த பெருமானின் விசேட செய்தியான "சப்வே சத்தா பவந்து சுகிதத்தா'" - அனைவரும் மகிழ்வாக இருத்தல் அனைவரும் துன்பங்கள் இன்றி வாழ்தல் என்பதன் முக்கியத்துவம் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

பௌத்தம் இலங்கை மற்றும் இந்தியா இடையிலான மிக முக்கியமான நாகரீக ரீதியிலான தொடர்பினை ஏற்படுத்தியுள்ளது. புதுடில்லியில் தர்ம சக்கர நாளினை முன்னிட்டு உரை நிகழ்த்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி, இன்று உலகம் வழமைக்கு மாறான சவால்களுக்கு எதிராக போராடுவதாக குறிப்பிட்டுள்ளார். இந்த சவால்களுக்கான தீர்வினை புத்த பெருமானின் போதனைகளிலிருந்து

பெற்றுக்கொள்ளமுடியும். கடந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களுக்கும் பொருத்தமானவையாக அவை அமைந்துள்ளன. 2017ஆம் ஆண்டு சர்வதேச வெசாக் தின கொண்டாட்டங்கள் இலங்கையில் நடைபெற்றபோது பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி பிரதம விருந்தினராக கலந்துகொண்டிருந்தார். இந்த பகிரப்பட்ட பிணைப்புகளை மேலும் இறுக்கமாக்கும் செயற்பாடாக இந்திய உயர் ஸ்தானிகராலயம் கடந்த மாதம் பொசன் பௌறா என்ற ஓவிய கண்காட்சியை நட்த்தியிருந்ததுடன் இதில் இலங்கை ஓவியக் கலைஞர்கள் பலர் தமது படைப்புக்களை காட்சிப்படுத்தியிருந்தனர். இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் வளாகத்தில் இருக்கும் சுவர்களில் அவை காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

எசல போயா தினத்தில் நடைபெற்றிருந்த இந்த இணைய கருத்தரங்கில் இலங்கையைச் சேர்ந்த களனி பல்கலைக்கழக வரலாற்று திணைக்களத்தின் தலைவர் வணக்கத்துக்குரிய கல்கண்டே தம்மானந்த தேரர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக சமூகவியல் பேராசிரியரும் விருதுகள் வென்ற புலமையாளருமான கலாசூரி டாக்டர் பிரணீத் அபேசுந்தர, இலங்கை பாளி பல்கலைக்கழகத்தின் பௌத்த கற்கைகள் பீடத்தின் பீடாதிபதியும் மத கற்கைகள் மற்றும் ஒப்பீட்டு தத்துவ பீட பேராசிரியர் சமந்தா இலங்ககோன், விருதுகள் வென்ற எழுத்தாளரும் கவிஞருமான திரு.தயா திசாநாயக்க ஆகியோர் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி இந்த இணைய வழி கருத்தரங்கில் வளவாளர்களாக பங்கேற்றிருந்தனர்.

இந்திய கலாசார அமைச்சு, நவ் நாலந்தா மஹாவிஹார ( நேரிணைப் பல்கலைக் கழகம்) துணைவேந்தர் டாக்டர் பைத்யநாத் லேப், பனாரஸ் இந்து பல்கலைக் கழகத்தின் பாளி மற்றும் பௌத்த கற்கைகள் பீட தலைவரும் பேராசிரியருமான டாக்டர் பிமலேந்திர குமார், கல்கத்தா பல்கலைக் கழகத்தின் பாளி பீட தலைவரும் பேராசிரியருமான டாக்டர். சஸ்வதி முட்சுட்டி மற்றும் வியட்னாம் ஹனோயில் உள்ள

இந்திய தூதரகத்தின் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் பனிப்பாளரும் விருதுபெற்ற எழுத்தாளர் , கவிஞர் மற்றும் வரலாற்று ஆய்வாளருமான டாக்டர் ஜி.பி.ஹரிஷா ஆகிய இந்திய வளவாளர்களும் இக்கருத்தரங்கில் பங்கேற்றிருந்தனர்.

சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் பணிப்பாளர் டாக்டர் ரேவந் விக்ரம் சிங் இந்த இணையவழி கருத்தரங்கை தலைமை தாங்கி நடத்தியதுடன் வரவேற்புரையும் வழங்கியிருந்தார்.

கொவிட் 19 நோயினால் ஏற்பட்டிருக்கும் தற்போதைய சவால்களை கவனத்தில் கொண்டு உலகின் நலன்களுக்காக பௌத்த தம்மத்தின் முக்கியத்துவம் தொடர்பாக வளவாளர்கள் கலந்துரையாடினர். எசல போயா தினத்தில் இந்தியாவின் சர்நாத்தில் புத்தபெருமான் முதலாவது பிரசங்கமான “தம்மாகப்பட்டவன சுத்தா”வை வழங்கியதன் முக்கியத்துவத்தினை குறிக்கின்றது. இந்நிலையில் இந்த கருத்தரங்கில் பங்கேற்றிருந்த புலமையாளர்கள் ஒவ்வொருவரை நோக்கியும் நாம் கடைப்பிடிக்கவேண்டிய இரக்கம் மற்றும் தாட்சண்யம் ஆகியவை தொடர்பாகவும் சுட்டிக்காட்டியிருந்தார். புலமையாளர்கள் சரியான உடல், வாய்மொழி மற்றும் மன ரீதியிலான செயற்பாடுகள் மூலமாக புத்தபெருமான் கூறியதன் அடிப்படையிலேயே ஒருவர் உலக நலன்களை உறுதிப்படுத்த முடியும் என புலமையாளர்கள் சுட்டிக்காட்டினர்.

ஆழமான சமூக மற்றும் மத கலாசார மற்றும் வரலாற்று அடிப்படையிலான இந்திய இலங்கை உறவுகள் தொடர்பாகவும் 2500 வருடங்களுக்கும் அதிகமான காலப்பகுதி முதல் நீடிக்கும் அந்த உறவு குறித்தும் புலமையாளர்கள் தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர். அந்த அடிப்படையில் வலுவான உறவினை வலியுறுத்தும் ஒரு விழாவாக எசல போயா தினம் அமைகின்றது. இந்த போயா தினத்தன்று, மன்னர் தேவநம்பிய திஸ்ஸவின் மருமகன் அரித்தாவும், மேலும் 55 பேரும் இந்தியாவின் மாகத் பேரரசர் அசோகரின் மகன்

மஹிந்த தேரரால் துறவிகளாக்கப்பட்டனர். இந்த நிகழ்வு இலங்கையில் புத்த சாசனம் நிறுவப்பட்டதையும் குறித்து நிற்கிறது. மேலும், எசல போயா நாளில், புத்த பெருமானின் புனித தந்த தாது இந்தியாவின் கலிங்கத்திலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது.

சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தினால் இந்த இணைய கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமைக்காக புலமையாளர்கள் பாராட்டுக்களை தெரிவித்திருந்ததுடன் இலங்கை மற்றும் இந்திய புலமையாளர்களையும் உலகின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்தவர்களையும் இணைத்து இவ்வாறான இணையக் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்யுமாறும் அவர்கள் கோரிக்கைகளை விடுத்திருந்தனர்.

இந்த இணையக் கருத்தரங்கு சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் பேஸ்புக் பக்கத்தில் நேரலையாக ஒளிபரப்பு செய்யப்பட்டது.

*****

கொழும்பு

2020 ஜூலை 04